**ஜூலை – 23**


# TNPSC துளிகள்

- ❖ மேற்கு வங்கத்தின் ஹவுராவில் உள்ள அமுல் பெங்கால் பால் பண்ணைத் திட்டத்தின் கீழ் உலகின் மிகப்பெரிய தயிர் உற்பத்தி ஆலைக்கான அடிக்கல்லை மத்திய உள் துறை அமைச்சர் நாட்டினார்.
- ❖ ஹரியானாவில் ஜிந்த் மற்றும் சோனிபட் இடையேயான இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் மூலம் இயங்கும் ரயிலை பிரதமர் நரேந்திர மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- ❖ சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் சட்ட விவகாரங்கள் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட 8-வது பிரிக்ஸ் நாடுகளின் வழக்குரைஞர் சேவைகள் தலைவர்கள் கூட்டத்தை இந்தியா நடத்தியது.
  - இக்கூட்டம் வழக்குரைஞர்களின் செயல்பாட்டுத் திறன், தீர்ப்பு மற்றும் பொது நம்பிக்கையை மேம்படுத்துவதற்கான சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ள உதவியது.
- ❖ அஸ்ஸாமின் மாகும் (Makum) நிலக்கரி வயலில் உள்ள திகாப் பர்பத் அமைப்பில் 24 மில்லியன் ஆண்டுகள் பழமையான, மனித நாகரிகத்தை விடப் பழமையானதும் இமயமலையின் இறுதி எழுச்சிக்கு முந்தையது என்பதைக் காட்டுகின்ற கெவ்டா (தாழம்பூ/பாண்டனஸ்) தாவரத்தின் புதைபடிவ இலைகளை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
  - பீர்பால் சாஹ்னி தொல் அறிவியல் நிறுவனத்தின் (BSIP) அறிவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதைபடிவங்கள், பாண்டனேசி குடும்பத்தைச் சேர்ந்தவை மற்றும் இந்தியத் துணைக் கண்டத்தில் கெவ்டா குறைந்தபட்சம் 24 மில்லியன் ஆண்டுகளாக உயிர் வாழ்ந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றன.
- ❖ வளர்சிதை மாற்றச் செயலிழப்பு தொடர்பான மது பழக்கம் சாரா கொழுப்பு ஈரலழற்சி/ஸ்டீட்டோஹெபடைடிஸ் (MASH) சிகிச்சைக்கு இந்தியாவின் முதல் ஊசி மூலம் செலுத்தக்கூடிய குளுகோகன் போன்ற பெப்டைட்-1 (GLP-1) ஏற்பி இயக்கியாக 'வெகோவி'-க்கு மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் (CDSCO) ஒப்புதல் அளித்துள்ளது.
  - MASH என்பது கல்லீரல் அழற்சி மற்றும் ஃபைப்ரோஸிஸை ஏற்படுத்தும் ஒரு முற்போக்கான கொழுப்பு கல்லீரல் நோயாகும்; மிதமான முதல் மேம்பட்ட ஃபைப்ரோஸிஸ் (F2-F3) உள்ள பெரியவர்களுக்கு உணவு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களுடன் வெகோவி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ❖ அறிவியல் சிந்தனையை மேம்படுத்தவும், விண்வெளி அறிவியலை பிரபலப்படுத்தவும், மத்தியப் பிரதேசத்தின் போபாலில் உள்ள மண்டல அறிவியல் மையத்தில் இந்தியாவின் முதல் விண்வெளி ஆய்வு கூடம் திறக்கப்பட்டது.
- ❖ 2040-ஆம் ஆண்டுக்குள் ஐரோப்பிய ஒன்றியத்தின் மின்மயமாக்கல் விகிதத்தை 46% ஆக உயர்த்தவும், ஐரோப்பாவை உலகின் முதல் "மின்மயமாக்கப்பட்ட கண்டமாக" மாற்றவும் ஐரோப்பிய ஆணையம் மின்மயமாக்கல் செயல் திட்டத்தை வெளியிட்டது.
  - இத்திட்டம் ஐரோப்பிய ஒன்றிய உமிழ்வு வர்த்தக அமைப்பின் (EU ETS) பெரிய சீர்திருத்தம் மற்றும் தொழில்துறை கார்பன் நீக்கத் திட்டங்களுக்கான €100 பில்லியனுக்கும் அதிகமான நிதியுதவியை உள்ளடக்கியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு (ABHA) விரிவாக்கம்

- தமிழ்நாடு 2.54 கோடி ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்குகளை (ABHA) உருவாக்கி உள்ளதுடன், அவற்றை அரசு சுகாதார நிலையங்களில் உள்ள சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு 3.0 (HMIS 3.0) உடன் ஒருங்கிணைத்து வருகிறது.
- ABHA என்பது 2021-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தின் (ABDM) கீழ் உள்ள 14 இலக்க தனித்துவமான சுகாதார அடையாளங் காட்டி ஆகும் என்பதோடு இது சுகாதாரப் பதிவுகளை டிஜிட்டல் முறையில் சேமிக்க மற்றும் அணுக உதவுகிறது.
- இந்த ஒருங்கிணைப்பு, நோயாளிகளின் ஒப்புதலுடன், தனிப்பட்ட சுகாதாரப் பதிவு (PHR) செயலி மூலம் மருந்துச் சீட்டுகள், ஆய்வக அறிக்கைகள் மற்றும் கண்டறியும் படங்கள் போன்ற டிஜிட்டல் மருத்துவப் பதிவுகளை அணுக அனுமதிக்கிறது.
- சுகாதாரப் பாதுகாப்பின் தொடர்ச்சியை மேம்படுத்தவும், காகிதப் பதிவுகளை சார்ந்திருப்பதைக் குறைக்கவும், ABDM ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு இடையே சுகாதாரத் தகவல்களைப் பாதுகாப்பாகப் பகிர்ந்து கொள்ளவும் ABHA உதவுகிறது.
- அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் மூலம் மாநிலத்தின் மக்கள் தொகையில் குறைந்தபட்சம் 50% பேருக்கு ABHA அடையாள எண்களை உருவாக்க தமிழ்நாடு இலக்கு நிர்ணயித்துள்ளது.




# தேசியச் செய்திகள்

## உலக வர்த்தக அமைப்பு (WTO) மீன்வள ஒப்பந்தம் - இந்தியா

- உலக வர்த்தக அமைப்பிடம் (WTO) தனது ஏற்புக்கான ஆவணத்தைச் சமர்ப்பித்ததன் மூலம், மீன்பிடித் துறைக்கான மானியங்கள் குறித்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட உலக வர்த்தக அமைப்பின் 123-வது உறுப்பினராக இந்தியா மாறியது.
- 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற 12-வது WTO அமைச்சர்கள் அளவிலான மாநாட்டில் (MC12) இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற (IUU) மீன்பிடித்தலை ஆதரிக்கும் மானியங்களைத் தடை செய்வதையும், அதிகப்படியான மீன்பிடித்தல் மற்றும் அதிக மீன்பிடி திறனுக்குப் பங்களிக்கும் மானியங்களைக் கையாளுவதையும்

இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஒப்பந்தமானது கடல்வாழ் உயிரினங்களை இயற்கையாகப் பிடிக்கும் மீன் பிடித்தலுக்குப் பொருந்தும்; மேலும் மீன் வளர்ப்பு மற்றும் உள்நாட்டு மீன்வளத்தை இதன் நோக்கத்திலிருந்து விலக்குகிறது.
- WTO உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஏற்றுக் கொண்ட பிறகு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.




## PARIVARTAN திட்டம்

- தேசிய தலைநகர் பிராந்தியத்தில் (NCR) போக்குவரத்து தொடர்பான காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கான PARIVARTAN திட்டத்திற்கான வழிகாட்டுதல்களுக்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் (MoHUA) ஒப்புதல் அளித்துள்ளது.
- PARIVARTAN என்பது போக்குவரத்து காற்று மாசுபாடு மற்றும் வலையமைப்பு உமிழ்வைக் குறைப்பதற்கான வாகன சொத்துக்களின் துரிதப்படுத்தப்பட்ட புதுப்பித்தல் மற்றும் ஊக்கமளிப்பதற்கான திட்டம் என்பதாகும்.
- பழைய, அதிக மாசுகளை வெளியிடும் லாரிகள் மற்றும் பேருந்துகளுக்குப் பதிலாக பாரத் நிலை (BS)-VI இணக்கமான அல்லது மின்சார வாகனங்களை மாற்றுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் (MoRTH) செயல்படுத்தப் பட்டு, தேசிய தலைநகர் பிராந்திய திட்டமிடல் வாரியத்தால் (NCRPB) நிதியளிக்கப்படுகிறது.
- இத்திட்டம் டெல்லி, ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியது மற்றும் VAHAN, V-Scrap, DigiELV மற்றும் பொது நிதி மேலாண்மை

அமைப்பு (PFMS) ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துகிறது.





# சர்வதேசச் செய்திகள்

## மக்கள்தொகை எதிர்காலக் கணிப்பு அறிக்கை 2026


- ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியமானது (UNFPA) இளைஞர்களின் அபிலாஷைகள், உறவுகள் மற்றும் குடும்ப முடிவுகளை பகுப்பாய்வு செய்யும் 'வாழ்க்கை, தேர்வுகள் மற்றும் எதிர்காலம் — மக்கள்தொகை எதிர்காலக் கணிப்பு அறிக்கை 2026'-ஐ வெளியிட்டது.
- உலகளாவிய இக்கணக்கெடுப்பு 73 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இணைய வசதி கொண்ட 108,926 இளைஞர்களை (18-39 வயது) உள்ளடக்கியது.
- பதிலளித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்டோர் திருமணத்தை உள்ளடக்கிய ஒரு குடும்ப அமைப்பை விரும்பினர், இது குடும்ப வாழ்க்கை மீதான தொடர்ச்சியான ஆர்வத்தைக் காட்டுகிறது.
- நிதிப் பாதுகாப்பு (81%) மற்றும் நிலையான வேலைவாய்ப்பு மற்றும் வீட்டுவசதி ஆகியவை கூட்டு மற்றும் பெற்றோருக்கான முடிவுகளில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணிகளாக அடையாளம் காணப்பட்டன.
- இந்தியாவில், 18 முதல் 39 வயதுக்குட்பட்ட பெண்கள் ஒரு குடும்பத்திற்கு 2.1 குழந்தைகள் இருப்பதே சிறந்தது என்று குறிப்பிட்டனர்; ஆனால், 35 முதல் 39 வயதுக்கு உட்பட்ட பெண்களிடையே காணப்பட்ட உண்மையான சராசரி எண்ணிக்கை 1.0 குழந்தையாகவே இருந்தது.
- பெற்றோராகும் விருப்பம் குறைவதைக் காட்டிலும், பொருளாதாரச் சவால்கள், வீட்டு வசதிக்கான செலவுகள், வேலைவாய்ப்பு குறித்த நிச்சயமற்ற தன்மை மற்றும்

போதுமான ஆதரவு அமைப்புகள் இல்லாமை ஆகியவையே கருவுறுதல் விகிதம் குறைவதற்கு முக்கியக் காரணங்களாக உள்ளன என்பதை அந்த அறிக்கை சுட்டிக் காட்டியது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### புதிய புறக்கோள் - பீட்டா பிக்டோரிஸ் டி (Beta Pictoris d)





❖ நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியை (JWST) பயன்படுத்தும்

வானியலாளர்கள், பீட்டா பிக்டோரிஸ் அமைப்பில் 'பீட்டா பிக்டோரிஸ் டி' என்ற புதிய மாபெரும் புறக்கோளைக் கண்டுபிடித்துள்ளனர்.

- பீட்டா பிக்டோரிஸ் என்பது 63 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள 23 மில்லியன் ஆண்டுகள் பழமையான நட்சத்திர அமைப்பாகும் என்பதோடு இது அதன் பிரகாசமான சிதைவுப் பொருட்கள்/குப்பைகள் வட்டுக்கு (debris disc) பெயர் பெற்றது; இது தற்போது மூன்று நேரடியாகப் படமாக்கப் பட்ட கோள்களைக் கொண்ட இரண்டாவது கிரக அமைப்பாகும்.
- வளிமண்டல கார்பன் மோனாக்சைடு மூலம் JWST-இன் அருகாமையில் உள்ள அகச் சிவப்பு நிறமாலைமானி (NIRSpec) மூலம் பீட்டா பிக்டோரிஸ் டி கண்டறியப்பட்டது, பின்னர் இது நடுத்தர அகச்சிவப்பு கருவி (MIRI) மூலம் நீராவி மற்றும் மீத்தேன் அவதானிப்புகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.
- இக்கோள் வியாழனை விட சுமார் 2 மடங்கு நிறை கொண்டது மற்றும் சிதைவுப் பொருட்கள்/குப்பைகள் வட்டின் உட்புற விளிம்பிற்கு அருகில் அதன் நட்சத்திரத்திலிருந்து சுமார் 30 வானியல் அலகுகள் (AU) தொலைவில் சுற்றி வருகிறது.
- மிதமான தெளிவுத்திறன் கொண்ட நிறமாலை மூலம் முதன்மையாகக் கண்டறியப் பட்ட முதல் புறக்கோள் இதுவாகும் என்பதோடு இது வளிமண்டல கைரேகைகளைப் பயன்படுத்திக் கோள்களைக் கண்டறியும் புதிய முறையை நிரூபிக்கிறது.

## சூரியனின் மறைந்திருக்கும் பிளாஸ்மா ஓட்டம்




- சூரியனின் மேல் குரோமோஸ்பியரில் மறைந்திருக்கும் மெரிடியனல் பிளாஸ்மா ஓட்டத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர், இது செயற்கைக்கோள்கள், வழிச் செலுத்தல், தகவல் தொடர்பு மற்றும் மின் தொகுப்புகளை பாதிக்கும் விண்வெளி வானிலை பற்றிய புரிதலை மேம்படுத்துகிறது.
- இந்த ஆய்வை ஆரியபட்டா ஆய்வு அறிவியல் நிறுவனம் (ARIES) மற்றும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் (PRL), இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் டெல்லி (IIT Delhi), இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (IIST) மற்றும் நாசாவின் கோடார்ட் விண்வெளிப் பயண மையம் ஆகியவை இணைந்து நடத்தின.
- மெரிடியனல் ஓட்டம் என்பது சூரியனின் பூமத்திய ரேகையிலிருந்து துருவங்களுக்கு பிளாஸ்மாவின் மெதுவான இயக்கமாகும் என்ற நிலையில் இது புலப்படும் மேற் பரப்பிற்கு மேலே சுமார் 3,000 கிமீ தொலைவில் உள்ளது மற்றும் 11 ஆண்டு சூரிய சுழற்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- 5-15 மீ/வி வேகத்தில் பிளாஸ்மா துருவங்களை நோக்கி நகர்வதைக் கண்டறிய,


ஜப்பானின் நோபேயாமா ரேடியோஹீலியோகிராஃப்-இன் (NoRH) 27 ஆண்டுக்கால அவதானிப்புகளைப் பகுப்பாய்வு செய்ய அறிவியலாளர்கள் ஒரு புதிய படத்-தொடர்பு நுட்பத்தைப் பயன்படுத்தினர்.

- ❖ இந்தக் கண்டுபிடிப்பு சூரிய டைனமோ பற்றிய புரிதலை மேம்படுத்துகிறது மற்றும் சூரியப் புயல்கள் மற்றும் பிற விண்வெளி வானிலை நிகழ்வுகளின் முன்னறிவிப்பை மேம்படுத்த உதவுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய தனித்த தேனீ இனங்கள்

- ❖ அசோகா சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக்கான அறக்கட்டளையின் (ATREE) ஆராய்ச்சியாளர்கள் அருணாச்சலப் பிரதேசத்தின் சியாங் பள்ளத்தாக்கில் இரண்டு புதிய தனித்த தேனீ இனங்களைக் கண்டுபிடித்தனர்.
- ❖ இந்த இனங்கள் எலாஃப்ரோபோடா ட்ரையாங்குலேட்டா, அதன் முக்கோண வயிற்று அடையாளங்களால் பெயரிடப்பட்டது, மற்றும் ஆதி பழங்குடி சமூகத்தின் நினைவாக பெயரிடப்பட்ட ஹப்ரோபோடா ஆதி ஆகும்.
- ❖ இரண்டு இனங்களும் தற்போது ஆண் மாதிரிகள் மூலம் மட்டுமே அறியப்படுகின்றன, என்ற நிலையில் இது இக்கண்டுபிடிப்பை அறிவியல் பூர்வமாக குறிப்பிடத்தக்கதாக ஆக்குகிறது.
- ❖ தனித்த தேனீக்கள் முக்கியமான மகரந்தச் சேர்க்கையாளர்கள் ஆகும் என்ற நிலையில் அவை தனியாகக் கூடு கட்டுகின்றன (கூட்டாக வாழும் தேனீக்கள் போல அல்லாமல்) மற்றும் பல்லுயிரியலைப் பேணுவதிலும் விவசாயத்தை ஆதரிப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.





# மாநிலச் செய்திகள்

## 1857 ஆவணக் காப்பகங்கள் - மத்தியப் பிரதேசம்

- ❖ மத்தியப் பிரதேசத் தொல்லியல் துறையானது 1857 கிளர்ச்சி தொடர்பான அரிய

வரலாற்று ஆவணங்களை சேகரித்துள்ளது, இதில் தாத்யா தோபேயின் கையொப்பம் கொண்ட பதிவு மற்றும் ஜான்சி ராணி லட்சுமிபாயின் அசல் ஓவியம் ஆகியவை அடங்கும்.

- ❖ அரிய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் வரலாற்று ஆவணங்களைச் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல் ஆகியவற்றுக்கான தேசிய முன்னெடுப்பான 'கியான் பாரதம் திட்டத்தின்' கீழ் இந்த ஆவணங்கள் பாதுகாக்கப் படுகின்றன.
- ❖ இந்தத் தொகுப்பில் முந்தைய சமஸ்தானங்களின் பதிவுகள் மற்றும் ஆங்கிலம், இந்தி, உருது, பாரசீகம், மராத்தி/மோடி மற்றும் புந்தேலி போன்ற மொழிகளிலான ஆவணங்கள் அடங்கும்.
- ❖ பன்னாவிலிருந்து சமஸ்கிருதக் கவிதைகள் பற்றிய 70 பக்க 16-ஆம் நூற்றாண்டு கட்டுரையும், சிருங்கார ரசம் மற்றும் நாயிகா-பேதம் போன்ற கருத்துகளை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட தொகுப்பின் ஒரு பகுதியாகும்.
- ❖ இந்த ஆவணக் காப்பகங்கள் காலனித்துவ நிர்வாகம், 1857 கிளர்ச்சி, சமஸ்தானங்கள் மற்றும் இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியம் பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வழங்குகின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★